[18th November 1963

திருமதி டி. என். அனந்தநாயகி : கோடம்பாக்கம் மேம்பாலம் கட்டுவதற்கான தொகை முழுவதையும் ஸ்டேட் ஹவுசிங் போர்டு கொடுப்பதாக ஒத்துக் கொண்டிருப்பதனால், அங்கே இப்போது காலியாயுள்ள இடங்களை எல்லாம் ஆர்ஜிதம் செய்து வருகிறார்கள். அப்படி ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களை பின்னர் இம்ப்ரூவ்ட் ப்ளாட்டாக அதிக லாபத்திற்கு விற்று அந்த லாபத்திலிருந்து இந்தச் செலவை ஈடு செய்துகொள்ளலாம் என்று நினைக்கிறார்கள் என்பதாக எல்லாம் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படி இருந்தால் அது நியாயமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரி திட்டம் ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினர் சொல்வது போல கோடம் பாக்கம் புதூர் திட்டம் என்பது முதலில் வகுக்கப்பட்டது. அதன் படி 400 ஏக்கரா ஆர்ஜதம் செய்யப்பட்டது. அதற்கப்பால் இன்னும் 600 ஏக்கரா ஆர்ஜதம் செய்வது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு புது நகரமே அங்கே எழுந்து கொண்டிருக்கிறது. நில ஆர்ஜிதம் செய்வதற்கும் மேம்பாலத்திட்டத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. அதற்காக நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியதும் இல்லை.

திரு. வை. சங்கரன் : பொதுவாக நம்முடைய ராஜ்யத்தில் ஹவுசிங் ஸ்கீம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இருந்தாலும் ஹவுசிங் அக்காம்மடேஷன் என்பது ஒரு தேசீயப் பிரச்சனையாக இருப்பதனால் அந்த வேலைகளையும் தொடர்ந்து நடத்த சர்க்கார் மறு பரிசிலனை செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 1963-64-ஆம் ஆண்டில் இல்லை. ஏனென்றால் நான்முன்பே சொன்னது போல மின்சாரத் திட்டங்களுக்கு முதலிடம் வகுத்துவிட்டதனால் இந்த ஹவுசிங் இனத்தில் தான் குறைத்தாக வேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கட்டப்பட்ட வீடுகளை அலாட் பண்ணுகிறபோது விண்ணப்பங்களின் ப்ரையாரிடி லிஸ்ட்படி விநியோகம் செய்யப்படுகிறதா ? அல்லது லாட்டரி போட்டு கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்காக ஒரு கமிட்டி இருக்கிறது. அந்தக் கமிட்டி எல்லா விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்து யார் யாருக்குக் கொடுப்பது என்று தேர்ந்தெடுக்கிறார்கள். ஏராளமாக அப்ளிகேஷன் வருகிறபோது லாட்ரி போட்டுகூட தீர்மானித்துவிடுகிறோம்.

கடற்கரை எஸ்டேட் வீடுகள்

*231 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மயிலாப்பூரிலுள்ள "Foreshore Estate" ல் வீடு ஒன்றுக்கு என்ன வாடகை வாங்க, கட்டியபோது உத்தேசிக்கப்பட்டது?

18th November 1963]

(இ) இப்போது ஒரு வீட்டுக்கு என்ன வாடகை வாங்கப்படுகிறது?

(உ) இந்த வீடுகளைக் கட்டி முடிக்க மத்திய அரசு வழங்கிய (1) கடன் தொகை (2) மானியத் தொகை எவ்வளவு?

(எ) மாநில அரசு கொடுத்த பணம் எவ்வளவு?

(ஐ) மொத்தம் செலவான தொகை எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) to (e) A statement[a] is placed on the Table of the House.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, போர்ஷோர் எஸ்டேட்டில் குடியிருக்கின்றவர்களிடமிருந்து மின்சாரத்திற்காக தனியாக செக்யூரிடி டெபாசிட் வாங்கப்படுகிறதா? அவ்விதம் வசூலிக்கவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மின்சாரம் சம்பந்தமாகத் தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துப் பதில் சொல்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : போர்ஷோர் எஸ்டேட்டு வீடுகள் மீனவர்களுக்காகக் கட்டப்பட்டன. வாடகை அதிகமாக இருக்கிறது என்று மீனவர்கள் போக மறுத்த காரணத்தினால் இப்போது அரசாங்க ஊழியர்களுக்கு மாதம் 33 ரூபாய் வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே பதில் அளித்திருக்கிறார்கள். இத்திட்டத்திற்காக மத்திய அரசாங்கம் கடனாகவும் மானியமாகவும் பன்னிரண்டு லட்சம் ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநில அரசாங்கம் 37 லட்சம் செலவிட்டிருக்கிறது. ஆகவே நம்முடைய மாநிலத் தொகை அதிகமாகவே இருப்பதனால் இந்த ஏழை மக்களுக்கு குறைந்த வாடகைக்கு இந்த வீடுகளை விடவும், அதே நேரத்தில் அந்த வீடுகள் அவர்களுக்கே சொந்தமாகும் விதத்தில் அமைக்கவும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கேள்வியில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று குறைந்த வாடகைக்கு வீடு கட்டிக் கொடுப்பது. பத்து ரூபாய்க்கும் குறைவாக டெனல்மன்ட் கட்டிக் கொடுப்பது என்பது இயலாது. இரண்டாவது இந்தப் பத்து ரூபாய் கொடுப்பது என்பதே அவர்களுக்கு இயலாத காரியம் என்கிறபோது அந்த வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக ஆக்குவது என்றால், வாடகைப்பணத்தோடு கூட இந்த நிலத்தின் பணத்தையும் சேர்த்துக் கொடுக்க அவர்களால் முடியுமா என்று யோசிக்க வேண்டும். மேலும் அவ்வாறு அனுமதித்தால் மற்றவர்களுக்கு அவர்கள் விற்றுவிடுவார்களோ என்ற பயம் இருக்கிறது. சென்னை நகரத்தில் அந்தமாதிரி சிலவிடங்களில் விற்றிருக்கிறார்கள் என்பதையும் பார்க்கிறோம். ஆகவே விற்பதற்கு சர்க்கார் முடிவு செய்யவில்லை.

a Printed as Appendix IV on pages 148–149 supra.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், அமைச்சர் அவர்கள் பதிலில் இப்போது "போர் ஷோர் எஸ்டேட்டில்" புதிதாக வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிட்டிருப்பதாகச் சொன்னார்கள். அங்கே நிலத்திற்குப் பணம் கொடுக்கப் போவதில்லை. அங்கு கட்டப்பட இருக்கும் கட்டிடங்களை இரண்டு அடுக்கு மாடிகைகளாகக் கட்ட வேண்டுமென்று போர்டு திட்டமிட்டிருக்கிறது. பீச் அருகில் ஏராளமான இடம் இருக்கிறது. மாடி வீடுகள் என்றால் மீனவர்கள் குடியேற மறுக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குச் சிறு சிறு வீடுகளாகக் கட்டிக் கொடுத்து அந்த வீடு அவர்களுக்கே சொந்தமாகும் வகையில் இன்ஸ்டால்மெண்ட் பேசிஸில் அவர்களுக்குக் கொடுக்க வழி வகுக்கலாம் அல்லவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதுதான் அதற்குப் பதில் சொன்னேன். பத்து ரூபாய் வாடகை கொடுக்க முடியாது என்று சொல்கிற அவர்களால், இன்ஸ்டால்மெண்ட் சிஸ்டப்படி மாதம் 50, 55 ரூபாய் கொடுக்க முடியாது. இரண்டாவது, அவர்களுக்கு அப்படிக் கொடுத்தால் அதை அவர்கள் வேறு யாருக்காவது விற்று விட்டுச் சென்று விடுகிறார்கள். ஆகவே, வாடகைக்கு அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தால்தான் அவர்கள் வசதியான இடத்தில் வாழ முடியும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த மாதிரி சேரிவாழ் மக்களுக்கு என்று வீடு கட்டி பிறகு மற்றவர்களுக்கு விட்டு விடுகிற காரணத்தால் மற்றப்பகுதி ஏழை மக்கள் தங்களுக்கு அவ்வாறு வீடு கட்டிக் கொடுக்க வேண்டாமென்று விண்ணப்பித்திருக்கிறார்களா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொல்வதற்கு மாறாக அந்தந்தப் பகுதிகளில் உள்ள மக்கள், 'எங்களுக்கு வீடு கட்டிக் கொடுங்கள், நாங்கள் முன்பு தவறு செய்துவிட்டோம், இலவசமாக வீடுகள் கட்டித் தருகிறோம் என்று சிலர் பிரசாரம் செய்த காரணத்தால் நாங்கள் முன்பு வேண்டாமென்று சொல்லி விட்டோம்" என்று கூறுகிறார்கள். இப்போது அவர்கள் அந்த 10 ரூபாய் வாடகையைத் தரத் தயாராக இருக்கிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஒரு டெனமெண்ட் கட்ட 5,500 ரூபாய் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. இரண்டு மாடிக் கட்டிடங்களுக்குப் பதில் சிறு சிறு வீடுகளாகக் கட்டுவதால் இன்னும் குறைந்த விலையில் சர்க்காரே ஏற்றுக்கட்ட முடியும். அப்படிக் கட்டினால் மாதம் 10 ரூபாய் வீதம் வாங்கினால் 18 ஆண்டுகளில் ஏழை மக்களுக்கு அந்த வீடுகள் அவர்களுக்கே சொந்தமாகிவிடும். ஆகவே, இந்தத் திட்டத்தைப் பற்றி புனராலோசனை செய்வதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதமான உத்தேசம் கிடையாது. குடிசைவாழ் மக்களுக்கு நிலத்தையோ, டெனமெண்டையோ விற்று விட்டால் அவை அவர்களிடத்தில் நீடித்து இருப்பதில்லை என்பதை அனுபவசாத்தியமாகப் பார்த்திருக்கிறோம்.